**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

**O.S. No. 85/2017**

Deposition of **P.W. 2**

Name of the Witness: திரு.ஸ்ரீதர்

Date **: 07 .01.2024.**

முதல் ***விசாரணை*** தொடர்ச்சி

1. ஒரு சொத்துக்கான பெயர் மாற்றம் செய்தால் மனுவின் பெயரில் ஆவணங்களை பரிசீலனை செய்து பெயர் மாற்றம் செய்யப்படும் என்றால் சரிதான். தாவா சொத்துக்காள முதல் அயிட்டம் தருமபுரி டவுன் வார்டு சி. பிளாக் 2, நகர புல எண்.107 கிருஷ்ணன் மகன் ராஜவேலு பெயரில் உள்ளது.

2. 2 வது அயிட்ட சொத்து தருமபுரி டவுன் வார்டு சி. பிளாக் 2, நகர புல எண்.111, 112 கிருஷ்ணன் மகன் ராஜவேலு பெயரில் உள்ளது.

3. 3 வது அயிட்ட சொத்து தருமபுரி டவுன் வார்டு சி. பிளாக் 2, நகர புல எண்.106 கிருஷ்ணன் மகன் ராஜவேலு பெயரில் உள்ளது.

4. 4 வது அயிட்ட சொத்து தருமபுரி டவுன் வார்டு சி. பிளாக் 2, நகர புல எண்.108 கிருஷ்ணன் மகன் ராஜவேலு பெயரில் உள்ளது.

5. 5 வது அயிட்ட சொத்து தருமபுரி டவுன் வார்டு சி. பிளாக் 2, நகர புல எண்.110 கிருஷ்ணன் மகன் ராஜவேலு பெயரில் உள்ளது.

6. சொத்திற்கு டவுன் சர்வே ரிஜிஸ்டர் படிதான் வரிவிதிப்பு செய்யப்படுமா என்றால், வரிவிதிப்பு வேறு துறையை சேர்ந்தது எனக்கு

தெரியாது. தாவா சொத்திற்கான டவுன் சர்வே நில ரிஜிஸ்டர் பதிவேடு கணினி நகல் நீ.ம.சா.3 (பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபணைக்கும் நிருபணத்திற்கும் உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.) நகராட்சி ஆணையரின் கீழ் உள்ள பிரிவில் வீட்டு வரி, குடிநீர் வரி சம்மந்தப்பட்ட ஆவணங்கள் அவர்களால் பராமரிக்கப்படுகிறது. சொத்து சம்பந்தமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டால் அந்த கோப்புகளை வட்டாட்சியர் மூலமாக பதிவறைக்கு அனுப்பி விடுவோம்.

7. கிருஷ்ணன் பெயர் மங்கம்மாள் பெயரிலிருந்து கிருஷ்ணன் மகன் ராஜவேலு பெயரில் மாறியதற்காக கோப்புகள் எங்கள் அலுவலகத்தில் தேடிபார்த்தும் கிடைக்கவில்லை. ஆவணங்கள் கிடைக்கவில்லை என்று வட்டாட்சியர் கடிதம் வழங்கியள்ளார். அந்த கடிதம் **நீ.ம.சா.4**

<u>குறுக்கு விசாரணை</u>

**1.** 2001 க்கு முன்பாக தாவா சொத்துக்கள் கிருஷ்ணன் மனைவி மங்கம்மாள் பெயரில் இருந்து வந்தது. சொத்துக்கான பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு முன்பாக ஏற்கனவே சொத்துக்கள் யார் பெயரில் உள்ளதோ அவருக்கு அறிவிப்பு கொடுக்கவேண்டும் என்றால் அவசியமில்லை. நான சொல்வது தவறு என்றாலும், சட்டப்படியும், இயற்கை நியதி படியும் ஆவணங்களை மாற்றுவதற்கு முன்பாக யார் பெயரில் ஆவணங்கள் உள்ளதோ அவருக்கு அறிவிப்பு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. எந்த ஆவணத்தின் அடிப்படையில் கிருஷ்ணன் மனைவி மங்கம்மாள் பெயரிலிருந்து கிருஷ்ணன் மகன் ராஜவேலு பெயரில் மாறியது என்று

எனக்கு தெரியாது.

2. **நீ.மா.ச.1** ல் பெயர் மாற்றம் செய்ததாக சொல்லப்படும் நடவடிக்கைகளை பொய்யானது என்றாலும் அந்த குறிப்பே போலியானது என்பதால்தான் அதற்குண்டான கோப்புகள் எதுவும் எங்கள் அலுவலகத்தில் இல்லை என்றால் சரியல்ல. மங்கம்மாளுக்கு தெரியாமல் எந்தவித முகாந்தரமுமின்றி ராஜவேலுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் அது சட்டப்படி தவறானது என்றால் சரியல்ல. சொத்துக்கள் பெயர் மாற்றம் செய்வது சம்பந்தமாக 1ம் பிரதிவாதி வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தின் படி 2017 ல் அனுப்பியுள்ளார். நான் 2021 ல் தான் வேலைக்கு சேர்ந்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் மங்கம்மாளுக்கு 12.06.2017 ல் கொடுத்த மனுவின் பேரில் அந்த கடிதம். **பி.வா.சா.2**. தனி வட்டாட்சியர் நகர நிலவரித்திட்டம் தருமபுரி நேரில் ஆஜராக சொல்லி கடிதம் அனுப்பியிருக்கிறார் என்றால் சரிதான்.

3. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் 1ம் பிரதிவாதி மங்கம்மாளுக்கு வருவாய் கோட்ட அலுவலர் தருமபுரியிலிருந்து 23.08.2017 ல் நேரில் ஆஜராக சொல்லி அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விசாரணை முடிந்ததா என்று எனக்கு தெரியாது. **நீ.மா.சா.3** டவுன் சர்வே நகர நிலபதிவேடு 14.06.2022 அன்று கணினியில் ஏற்றப்பட்டது. அதில் TR என்று குறிப்படப்பட்டிருப்பது பெயர் மாற்றத்திற்கான நடவடிக்கை என்றால்

சரிதான். இந்த TR எண் **நீ.மா.சா.1** ல் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 30.06.2017 தருமபுரி நகராட்சியால் மங்கம்மாளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக உள்ளது. என்னிடம் காட்டப்படும் நகராட்சியால் வழங்கப்பட்ட 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் இதைப்பற்றி எனக்கு அதிக விவரம் தெரியாது. நகராட்சி சொத்து வரி ரசீது இல்லாமல் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட எந்த பத்திரமும் பதிவு செய்ய முடியாது என்றாலும். பெயர் மாற்றமும் செய்ய முடியாது என்றால் சரிதான்.

4. நான் உண்மை விவரங்கள் தெரிந்தே நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எந்தவித உரிமை ஆவணமும் இல்லாமல் அல்லது முகாந்திரமோ இல்லாமல் ராஜவேலு பெயரில் தாவா சொத்துக்கள் பெயர் மாற்றம் செய்திருப்பது சட்டப்படி செல்லாது என்றால், ஆவணங்களில் என்ன குறிப்பிட்டுள்ளதோ அதன் படி நான் சாட்சியம் அளிக்கிறேன். நான் தாக்கல் செய்த ஆவணங்களில் உள்ள குறிப்புகளும், உத்தரவுகளும் பொய்யானது என்றால் அந்த ஆவணங்கள் செல்லாது என்றால் சரியல்ல.